ஹரி ஓம்

# சுதந்திரமும் தன்னிச்சையும்



தவத்திரு சுவாமி சின்மயானந்தா

## எமது இதர புத்தகங்கள்

1. அன்பின் ஆழங்கள் ✓
2. ஆத்ம போதம்
3. இல்லத்திற்கான ஆன்மீக அறிவுரைகள்
4. உண்மைச் சேவகன் ✓
5. ஈஸாவாஸ்ய உபநிஷத்
6. ஞான சாரம்
7. பஜகோவிந்தம் ✓
8. பால விஹார் துணைவன்
9. பகவத் கீதை (பாடல்)
10. பகவத் கீதை (பாகம் I&II)
11. பகவத் கீதை(VII)
12. தியானமும் வாழ்க்கையும்
13. நீதிக் கதைகள்
14. வாழ்க்கை முறை ✓
15. சேவை தேவையா?
16. ஜப காயத்ரி
17. ஒரு கதை சொல்
18. செயலின் இரகசியம்
19. வாழ்க்கையெனும் விளையாட்டு ✓
20. நமது குழந்தைகளே நமது எதிர்காலம் ✓
21. ஆனந்த ஊற்று

# சுதந்திரமும், தன்னிச்சையும்

தான் வாழ்வதற்கு மிகச்சிறந்த இடமாக இந்த உலகை மனிதன் மாற்றியிருக்கிறான். மனிதனை அலைகழித்தும் அச்சுறுத்தியும் வந்த இயற்கை சக்திகள் யாவையும் மனிதனின் அறிவுத்திறத்தால் வசமாக்கப் பட்டு தனக்கு தொண்டு செய்யும் வண்ணம் ஆக்கப்பட்டு உள்ளன. காடாய், களராய் இருந்த நிலங்கள், அபரிதமான விளைச்சல் நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. காட்டுமிராண்டித் தனத்திலும் மூட நம்பிக்கைகளிலும், ஆழ்ந்து கிடந்த மனிதசமுதாயம் நாகரிகமாயும் அறிவு சார்ந்ததாயும் மாறியிருக்கிறது. உருவாக்கிய வசதிகளும், வாய்ப்புகளும் கவர்ச்சி நிறைந்ததாயும், மனதை ஆக்கிர மிப்பதாயும் அமைந்திருக்கிறது. எந்தவிதமான தடங்கலு மின்றி, சுகங்களில் திளைப்பதே தன் நோக்கமாய் கொண்டுள்ளான் மனிதன். இத்தனை வசதிகள் நிறைந்தி ருந்தும், வசதியின் மத்தியில், வாய்ப்புகளுக்கு நடுவே மனித வாழ்க்கை சோகம் நிறைந்ததாயும், இருள் சூழ்ந்த தாயுமே அமைகிறது.

(வாய்ப்புகளுக்கு நடுவே தோல்வியும் வசதி களுக்கு நடுவே சோகமும் நிறைந்திருக்கும்) இந்த வாழ்க்கைப்புதிரே, நம்முடைய ரிஷிகளின் ஆராய்ச்சிக்கு உரிய பொருளாக இருந்திருக்கிறது. தங்களின் ஆழ்ந்த ஆராய்ச்சியின் விளைவாய் அவர்கள் கண்ட உண்மை, முறையற்ற அளவுக்கு அதிகமான புலனின்ப நுகர்ச்சி,



R. Y. D. Barhatty

மனிதனை அழிவில் தள்ளுகிறது என்பதே! உதாரணமாக முதல் தின்பண்டம் சுவையுள்ள தாயும் அதன் எண் ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க அதே பண்டத்தின் சுவை குறைவதையும் காணலாம். இருபதாவது தின்பண்டம் ருசியற்ற தோடல்லாமல், ஒரு மனிதனின் ஆரோக்கியத்திற்கும் தீங்கு பயக்கின்றது! இந்த உண்மையை மையமாக வைத்து நமது முன்னோர்கள் வாழ்க்கையில் மனிதன் உலகோடு கொள்ளும் உறவின் மூலமாக அடையும் சுகத்தை நீடிக்கச் செய்ய சில அடிப் படை விதிகளையும்,ஒழுக்கங்களையும் வகுத்தளித்தனர்.

ஆனால் மனிதன் சுயநிலை சுதந்திரத்தில் திளைத்திருப்பதால் எந்த விதிகளையும் நிராகரிக்க தயாராகிவிடுகிறான்! "செய் அல்லது செய்யாதே" என்ற விதிகளை ஏற்பதில் அவன் மகிழ்வடைவதில்லை. அவனைப் பொறுத்தவரையில் விதிகளும், அன்பான கட்டளைகளும் எருது முன் தோன்றும் சிவப்புக் கொடியாய்த்தோன்றி, அதை எதிர்த்து உறுமத் தயாரா கிறான் சுதந்திரமென்பது சுய ஒழுக்கத்தாலும் விதி களாலும் அமைக்கப்பட்டதென்பதை சிறிதே உணர்கி றான்! உதாரணமாக சாலை விதியை ஒழுங்குபடுத்தும் விதிகள் நாம் நினைத்த வண்ணம் காரோட்ட முடியாமல் திணிக்கப்பட விலங்கே! ஆனால் அந்த ஒழுங்கு விதிகள் தான் நம்முடைய சீரான காரோட்டத்திற்கு அவசியம் ஆகிறதன்றோ? தன்னிச்சை என்னும் நாசக் காரியத்திலிருந்து காப்பதும் இந்த விதிகள் தானே!

சுதந்திரத்தையும் தன்னிச்சையையும் தனித்துப் பார்க்க இயலாத குறையே நாகரிக மனிதன் ஆன்மீக ஒழுக்கங்கள் மீது காட்டும் வெறுப்புக்கு அடிப் படையான காரணம்! சுய ஒழுக்கத்திற்கான அவசியத் தையும் அதன் பெருமையையும் நமது ஆன்மீக நூல்கள் விஞ்ஞான ரீதியாக நமக்கு தெளிவாக்குகின்றன! புதிதாகத் தயாரிக்கப்பட்ட இயந்திரத்தை இயக்குவதற்கு அதன் அமைப்பு பற்றிய விளக்கம் எந்த அளவிற்கு அவசியமாயும் உதவியாயும் அமைகிறதோ அதே அளவிற்கு இந்த இலக்கியங்கள் நமக்கு உதவுகின்றன. இயற்கையின் மிகச்சிக்கலான படைப்பான மனிதனுக்குத் தான் உலகோடு வைத்துக் கொள்ளும் உறவையும் செயலையும் சீராக்கிக்கொள்ள, வகைப்படுத்திக்கொள்ள இந்த இலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றன! இந்த விதிகளுக்குட்பட்டு வாழ்வில் அதிக இன்பம் காணவும் அவைகளை நிராகரித்து தன்னகத்தே உள்ள காரணங் களை தவறாக உபயோகித்து வாழ்க்கையில் துன்பத்தை தாங்கி அழியவும், மனிதனுக்கு முழு உரிமை உண்டு. அவன் தன்னை ஆக்கலாம்! மாறாக அழிக்கலாம்!!

ஆன்மீக இலக்கியங்கள் மனிதனை தன்னைத்தானே வளர்த்துக்கொள்ள மிகச்சிறந்த அக உலக விஞ்ஞானத்தை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. மனித முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ள நாம் ஏன் இந்த பலனளிப்பதில் உத்திர வாதமளிக்கும் வாழ்வியல் விஞ்ஞானத்தை கடைபிடிக்கக் கூடாது.

# உறவு என்னும் கலை

தன்னிச்சையாக திரிவது சுதந்திரத்தை அனுபவிப்ப தாகாது. மாறாக அழிவெனும் ஒரே முடிவிற்குத்தான் அழைத்துச் செல்லும். நம் சுதந்திரத்தை இயற்கையின் நியதி என்னும் அணிகலன் கொண்டு அலங்கரிக்கையிலும், அடுத்தவரின் சுதந்திரத்தை ஏற்றுக்கொள்ளும் போதும் நாம் அதிக மகிழ்வுடனும் உயர்ந்தும் வாழ்கிறோம். ஒவ்வொரு தேசமும் சுதந்திரத்தின் பெருமையை உணர்கிறது. ஆனால் அதை காப்பதற்காகத்தான் சில விதிகளையும் நிர்ணயிக்கிறது.

இதே போன்றுதான் நாம் உலகோடு வைத்துக் கொள்ளும் உறவிற்கு ஓர் அர்த்தத்தையும் அதன் வாயிலாக நாம் பெறும் இன்பத்தை நீடிக்கச் செய்யவும் ஆன்மீக இலக்கியங்கள் சில வாழ்க்கை முறைகளை, நியதிகளை நமக்கு கற்பிக்கின்றன. சீரிய சிந்தனையால் விளைந்த தெளிவும், இந்த இலக்கியங்கள் காட்டும் விதிகள் மீது வைக்க வேண்டிய விசுவாசமும் நம்மை அமைதியான வாழ்விற்கும், நிலையான வாழ்க்கைச் சுகத்திற்கும் அழைத்துச் செல்கின்றன. மின்சாரம் என்னும் இயற்கைச் சக்தி இந்த உண்மையை மிகத் தெளிவாக நமக்குப் புலப்படுத்தும். ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பும் வண்ணம் உபயோகிக்கப்பட வேண்டியதே மின்சாரம். ஆனால் எந்த ஒரு சக்தி நமக்குத் தொண்டு செய்யத் தயாராய் உள்ளதோ அதே

சக்தி நாம் வைத்துக்கொள்ளும் உறவு தவறாய் அமையும் பொழுது நம்மையே அழிக்கத் தயாராகி விடுகிறது.

உலகம் துன்பகரமானது. அதர்மமும், சுயநலமும் மிகுந்து கிடக்கும். இதில் நாம் எப்படி நிலையான மகிழ்வையும் சீரான வாழ்வையும் பெறுவது இயலும் என்பது நாம் பரவலாக கேட்கும் ஒரு குறை. ஆனால் நம் கையில் இருக்கும் புத்தி என்னும் கத்தியை கூர்மையாக்கிக் கொள்ள கரடுமுரடான தளமெனும் உலகம்தான் உதவும். நாம் தெரிந்துகொள்ள வேண்டிய தெல்லாம் கத்தியை எப்படிக் கல்லோடு உராய்ந்து கூர்மையாக்கிக் கொள்ள வேண்டும் என்ற கலையே. அதே போன்று இந்த உலகோடு நாம் வைத்துக் கொள்ள வேண்டிய முறையையும் கற்றுக் கொண்டால் அக உலகின் தன்மையை நிர்ணயிக்கும் கருவிகளின் தன்மை கூர்மையடைந்து சிறப்பாகிவிடும்.

ஆகையினால் உலகம் ஒரு பிரச்சனையல்ல! அதில் வாழும் மனிதனின் அக உலகின் தரத்தைப் பொறுத்து உலகம் பல முகங்களை அவனுக்குக் காட்டுகிறது. அவன் மிரளவும் முடியும்! அணைக்கவும் முடியும்! இந்த சிறிய உண்மை புலப்படாத காரணத்தால் மனிதன் உலகைக் குறை கூறுவது இயற்கையாகி விடுகிறது. ஒரு டம்ளரில் அரைப்பங்கு பால் நிரப்பப்பட்டிருக்கிறது என்று வைத்துக்கொள்ளுவோம். ஒரே டம்ளரை மனிதன்

பல கோணங்களில் பார்த்துப் பழகிக் கொண்டான். பாலுள்ள பகுதியை மட்டும் பார்த்து அதை பருக முயற்சிக்கிறான். அடுத்தவன் காலியாக இருக்கும் பாகத்தைக் கண்டு குறை கூறி டம்ளர் முழுவதும் இருக்க வேண்டாமா என்று ஏங்குகிறான்! இது அவரவருடைய உணர்ச்சி. அறிவு என்னும் அக அமைப்பிற்கேற்ப அமைகிறது.

ஒரு முடவன் கால் உள்ளவனைப் பார்த்து ஏங்குவதும், கால் உள்ளவன் ஸ்கூட்டரில் செல்பவனை பார்த்து ஏங்குவதும். ஸ்கூட்டர் உள்ளவன் காரோட்டியைப் பார்த்து ஏங்குவதும், காரோட்டி தான் கட்ட வேண்டிய செல்வ வரியை நினைத்துப் புழுங்குவதும் மனிதனிடத்தில் நாம் அன்றாட வாழ்வில் காணும் அக அமைப்பின் வெளித்தோற்றங்கள். ஒருவரை ஒருவர் ஒப்பிட்டுப் பார்த்து ஏங்குவதே மனிதனின் துன்பத்திற்கு அடிப்படைக் காரணமாகிறது. இதற்கு ஒரே மாற்று மருந்து தன்நிலை உணர்ந்து தம்மின் எளியவர் பலர் உளர் என்ற உண்மையை ஏற்று தான் வளர்ந்து வரும் சூழ்நிலையைத் தந்த ஆண்டவனுக்கு ஒரு நன்றியுணர்வுடன், குறைபடு வதிலும், ஓலமிடுவதிலும் செலவழிக்கும் மனோ சக்தியை ஒருமுகப் படுத்தி தனக்குள்ள செயற்களத்தில் சிறப்பாக செயல்படுவதே.

## மனிதனின் பிறப்பியல்பு

சிக்கல்களுக்கு அப்பாற்பட்டு சுதந்திரமாய் வாழ்வைக் கழிக்க விரும்புவதே மனிதனின் பிறப்பியல்பு ஆகும்! எவனொருவன் கணத்தில் தோன்றி மறையும் உலகப் பொருட்களின் சிற்றின்பங்களில் மனத்தைச் சிக்க வைத்து சீரழியாமல் மனிதனுடைய இன்பத்திற்கு அவனுடைய மனப்பாங்கே காரணம் என்று உறுதி கொள்ளும் அளவிற்கு தெளிவடைந்து விடுகிறானோ அவனே சுதந்திர மனிதனாகிறான். மற்றெல்லோரும் வாழ்க்கை என்னும் புயலில் சருகாய் சிதறடிக்கப் படுபவர்களே!

காட்சிக்கு பொருளாக விளங்கும் இந்த புலன்சார் பொருட்களிடத்தில் (ஒளி, ஓசை, மணம், சுவை, தொடு உணர்வு என்ற ஐந்து அடிப்படை உணர்வுகளை மாறுபட்ட அளவுகளில் கொண்டது இந்த உலகப் பொருட்கள்) மனிதனின் புலன்களை வசமாக்கும் வசீகரத் தோற்றம் இயற்கையாய் அமைந்துள்ளது. தோற்றத்தில் மட்டும் கவரும் தன்மை வாய்ந்த உலகப் பொருட்களின் குரலுக்கு செவிசாய்க்காமல் தன்னிலையைச் சிறிதும் தளரவிடாது காத்து வாழ்வதே மனிதனின் உயர்ந்த நிலையும், பெருமையும் ஆகும். இவ்வாறு தன் சுய நிலையோடு ஒன்றிய மனதைப் பெற்று வாழ்க்கை நடத்தும் மகான்கள், வாழ்வென்னும் கடலுக்கு கலங்கரை

விளக்கு போன்றவர்கள்! ஆனால் இன்று சராசரி மனிதனுடைய வாழ்வு, கடல் நடுவில் நிராகரிக்கப்பட்ட ஓடத்திற்கு ஒப்ப இங்குமங்கும் திசை மாறி ஸ்திரமற்று அலைக்கழிவிற்கு ஆளாக்கப்பட்டுக் கொண்டிருக் கிறது. எப்படி ஒரு மாலுமி கடலின் கரையை அந்த திசை காட்டும் கருவியில் நம்பிக்கை வைத்து முறையாக கரையை நோக்கி நிமிடத்திற்கு நிமிடம் முன்னேறு கிறானோ அதே போல் நாமும் (ஒவ்வொரு உண்மை யறியாத சாதாரண மனிதனும்) வாழ்க்கையென்னும் கடலுக்கு கலங்கரை விளக்கங்களான அந்த மகான்களின் போதனைகளிலும் அவர்கள் போதிக்கும் அறிவுசார்ந்த பயிற்சிகளிலும் நம்மை ஈடுபடுத்தி, "மன அமைதி" - "நீங்காத மனமகிழ்வு"என்னும் கரையை அடைய வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் இயற்கையில் புனிதமானவனே! அறியாமையால் அலைகழிக்கப்பட்ட போதிலும் ஒவ்வொரு நிமிடமும் அவனிடம் குடிகொண்டு இருக்கும் புனிதத்தின் குரலை உணர்ந்து தான் வருகிறான்! ஆனால், அன்றாட வாழ்வில் தோன்றி மறையும் பிரச்சனைகளில் அவன் கொண்டுள்ள அத்துமீறிய ஈடுபாடு, அந்தக் குரலுக்கு செவிமடுத்து தேவையானவற்றைச் செய்து அமைதிக் கரையை, ஆனந்தபூமியை அடைய முடியாமல் தடுத்துவிடுகிறது.

சமயம் அல்லது மதம் என்னும் பெயரில் நமக்கு வழங்கப்பட்டுள்ள ஆரோக்கியமான வாழ்க்கைத் திட்டம் ஒவ்வொரு மனிதனுக்கும் சரியான வாழ்க்கைத்திசையை இடைவிடாது காட்டிக் கொண்டுதான் இருக்கிறது. எப்படி ஒரு மாலுமிக்கு தன்வசமிருக்கும் திசைகாட்டும் கருவி யின் நுணுக்கத்தில் சந்தேகம் தோன்றுவதில்லையோ, அதே போன்று நாமும் இந்த மகான்களினுடைய உண்மையான போதனைகளில் நம்பிக்கையும், விசுவாசமும் வைக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் முட்டாள்தனமாக எதையும் ஏற்றுச் செயல்படும் மனோபாவத்தை நம்முடைய ரிஷிகள் ஒருபோதும் வரவேற்கவில்லை.

இப்படி ஒரு ஆழ்ந்த அமைதியையும், சற்றும் தளராத மனோவலிமையையும் கொண்ட ஒரு மகானை எந்த செயலிலும் ஈடுபடமுடியாத ஒரு ஜடப்பொருளுக்கு ஒப்பாக எளிதில் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறோம்.

சிறிய விஷயங்களிலும் வாழ்க்கையின் அர்த்தமற்ற ஆரவாரங்களிலும் அக்கறை கொள்ளாத, செவி மடுக்காத வளர்ந்த நிலையை 'வாழ்க்கையில் வெறுப்பு' என்ற முற்றிலும் தவறான பெயரைச் சூட்டி விடுகிறோம். இந்த விமர்சனங்களுக் கெல்லாம் ஆதாரம் அவன் வாழ்வில் அடைந்த வெற்றி இன்னதென்று நமக்கு அறியாத, அறிய முயற்சிக்காத குறையே! ஒரு

மகானை "உணர்வற்றவன்" என்று தவறுதலாகக் கணக்கிடுவது நமது அறியாமையை வெளிப்படுத்தும் ஒரு செயலே! அவன் உணர்வுகளை அறுத்தெறிந்து தன்னை மரக்கட்டையாக்கிக் கொண்டதில்லை. ஆனால் அவன் ஒருபோதும் உணர்வுகளுக்கு அடிமை ஆகி, தன் வசமிழந்து, வாழ்வில் தவறி விழுந்தவன் அல்லன்! மகான்களுக்கு ஒவ்வொரு உணர்ச்சியும், ஒரு அலங்காரமே தவிர அவனை கட்டியிழுக்கும் விலங்கு களல்ல! உணர்வுகளுக்கு அடிமையாகி உணர்ச்சி வசப்பட்ட எந்த மனிதனும் எந்தத் துறையிலும் வெற்றி பெற்றதில்லை! உணர்ச்சி நிறைந்தவனும், உணர்ச்சி வயப்பட்டவனும் இரு வேறுதுருவங்கள் "உணர்ச்சி வயப்படுதல்" ஒருவன் வாழ்வில் விழுந்த கீரல்.

இந்த நாட்டில் வாழ்ந்த மகான்கள் ஒருபோதும் தன்னை உணர்ச்சிக்கு அடிமையாக்கிக்கொள்ளாமல், வாழ்வென்னும் சிகரத்தில் அணையா விளக்குகளாகத், திகழ்ந்தனர். அவர்களுடைய உணர்வு நிறைந்த இதயம், மனித சமுதாயம் அறியாமையால் படும் வேதனையைக் கண்டு வருந்தினாலும், அவர்களுடைய தெளிந்த, கூர்ந்த மதி, நம்மில் ஒருவராக மாறி துயரச் சூழலில் சிக்கி அர்த்தமற்ற மனிதர்களாய் அவர்களைக் குறைத்து விடவில்லை. வாழ்க்கையின் வெளித்தோற்றம் இப்படி யிருந்தாலும் கூட, அதை மாற்றியமைக்கும் வல்லமை

மனிதனிடத்தில் இயற்கையாய் இருக்கிறது! உணர்வுகளிலிருந்து விடுபட்டு, அறிவின் நிலையை ஸ்திரப்படுத்தி, உண்மையான மனிதனாக வாழச் செய்யும் நங்கூரம் போன்றதே சமய இலக்கியங்கள் போதிக்கும் 'வாழ்க்கை லட்சியங்கள்'. வாழ்வில் ஒவ்வொரு மனிதனுக்கும் வெற்றி வாய்ப்புண்டு! அதன் ரகசியம் அவன் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் லட்சிய அமைப்பில் புதைந்து கிடக்கிறது. வாழ்வில் வெற்றி பெற நினைக்கும் ஒவ்வொரு மனிதனும், எளிதில் சிதறுண்டு போகும் "உளப் பலஹீனத்தை" நீக்க வேண்டும்.

ஆகவே முறையாகப் புரிந்து கொண்ட ஒரு லட்சியத்தை தேர்ந்தெடுப்போமாக! அதை அடைவதில் நம்முடைய முழு முயற்சியும், நேரமும், விசுவாசமும் நமக்கு உதவட்டும்!

ஆன்மீகம் அன்றாட வாழ்விற்கு புறம்பானதல்ல. ஒவ்வொரு சூழ்நிலையையும். சந்தர்ப்பத்தையும் எவனொருவன் தன் லட்சியத்தை அடைவதற்காக திறமையாக மாற்றி அமைத்துக் கொள்கிறானோ அவனே உண்மையான ஆன்மீகத்தில் சுவை கண்டவன்.

---

"அனைத்தையும் அமைதியாக கவனி. நல்லதை ஏற்று அல்லாததை ஒதுக்கவும், மறக்கவும் கற்றுக்கொள். இதுவே அறிவு பூர்வமான வாழ்க்கைக்கு வழி."

*'சின்மயா'*

# வாழ்க்கையின் ஆனந்தம்

பிறந்த விநாடிமுதல் இறக்கும் தருவாய்வரை ஒவ்வொரு மனிதனும் இரண்டுவிதமான ஆசைகள்ால் உந்தப்பட்டு, சதா செயல்களில் ஈடுபட்டவண்ணம் இருக்கிறான். ஒன்று துன்பத்தைத் தவிர்ப்பது. மற்றொன்று இன்பத்தை நிலைநாட்டிக் கொள்வது. விரும்பாத ஏற்றுக் கொள்ளமுடியாத சூழ்நிலைகளை பொருட்களை, எதிர்ப்பதும், அழிப்பதும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொருட்களை. சந்தர்ப்பங்களை அடைவதும், உருவாக்குவதுமான இரண்டு செய்ல்களே ஒவ்வொரு மனிதனையும் ஆக்ரமித்துக் கொண்டுள்ள வாழ்க்கைத் திட்டங்கள். ஆனால் உலகமோ சந்தர்ப்பங்களையும் பொருட்களின் தரத்தையும் நிலையையும் மாறிமாறி உருவாக்கி மனிதன் முன் நிறுத்துவதில் சளைக்காமல் உருண்டு கொண்டிருக்கிறது. அதற்கேற்ப மனிதனும் தன்னுடைய செயல்களையும் இடைவிடாது தொடர்ந்த வண்ணமாகவே இருக்கிறான்!

இன்பத்தை அடைய எடுத்துக் கொள்ளும் முயற்சிகளும், திட்டங்களும், அதற்குண்டான பொருட்களும் மனிதனுக்கு மாறுபடலாம்! ஆனால் எல்லோரிடத்திலும் மாறாத வேட்கை, வாழ்க்கையை எப்படி ஆனந்தமயமாக்குவது என்பதே!. இந்த உண்மையை சற்று ஆழ்ந்து சிந்திக்கின்றபோது. "எங்கே

இருக்கிறது நாம் தேடும் இன்பம்" என்ற அத்தியாவசி யமான கேள்வி ஒவ்வொரு வளர்ந்த மனதிலும் தோன்றக்கூடியது.

இன்றைய நாகரீக மனிதனின் அசையாத நம்பிக்கை மனித மன மகிழ்விற்கும். அமைதிக்கும் காரணம், புலனின்பத் திற்குண்டான பொருட்களை அனுபவிப்பதில்தான் என்பதாகும். இந்த நம்பிக்கையில் ஊறித்திளைத்த நமது சமுதாயம் பொருட்களை அடைவதிலும், அனுபவிப்பதிலும், சளைக்காமல் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. "பொருளே பிரதானம்" என்ற வாழ்க்கைலட்சியம் எல்லோருடைய இதயத்திலும் ஆழப் பதிந்து விட்டதாகத் தெரிகிறது. ஆனால் சிறிதே சிந்திக்கத் தெரிந்த மனிதன்கூட தேடித் திரட்டிய பொருளின் அளவும் ஒருபோதும் பொருளுக்கேற்றபடி 'அளவில்' முறையாய் அமைந்ததில்லை.

மாறாக ஒன்றுக்கொன்று எதிர்மறையாய் அமைவதை உணரத்தவற மாட்டான். பெரும் செல்வந்தன் அரண்மனை போன்ற, ஆடம்பரப் பொருட்களால் அலங்கரிக்கபட்ட எல்லா நவீன வசதிகளும் கொண்ட அழகிய அறையில் உட்கார்ந்து புலம்புவதும், புழுங்குவதும். நேர்மாறாக மேல்துண்டு கூட இல்லாமல் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு மாடுகள் மேய்பதைப் பார்த்து ரசித்து கொண்டிருக்கும்

ஒரு சாதாரண கூலி, என்றோ ஒருநாள் கேட்ட ஒரு கிராமத்துப் பாடலை முணுமுணுத்து, வாழ்க்கையில் மகிழ்ச்சிநிறைந்த விநாடிகளை அனுபவித்துக் கொண்டிருப்பதும் நமக்குப் புதிதாகத் தோன்றும் சம்பவங்களல்ல! அன்றாட வாழ்வில் அனைவரும் காணும் உண்மையே!

மேலும் புலன்கள் பொருட்களிடத்தில் உண்மையில் மனிதனுக்கு இன்பமூட்டும் தகுதியிருந்தால் அவைகளை அனுபவிக்கும் ஒவ்வொரு விநாடியும் நம் முடைய மகிழ்ச்சியின் அளவு அதிகரித்துக் கொண்டே போக வேண்டும். ஆனால் உண்மை நேர்மறானது! ஒருவனுக்கு புகை பிடிப்பதில் மகிழ்ச்சியென்றால் அதே புகைச்சுருள் மற்றவனுக்கு எரிச்சலூட்டும் பொருளாக ஒரே நேரத்தில் காட்சியளிக்கிறது. ஒரே பொருள் எரிச்சலுக்கும், இன்பத்திற்கும் காரணமாகின்ற உண்மையை அடுத்து நாம் கேட்க வேண்டிய கேள்வி 'இன்பம் என்றால் என்ன?' என்பதல்லவா?

சீரிய சிந்தனை ஒரு உண்மையை வெளிப்படுத்தும். ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கும் ஆனந்தம் அல்லது மகிழ்வு என்பது அவரவருடைய மனோநிலையே! மனம் குழம்பிய நிலையில் துக்கத்தை அனுபவிப்பதும் அமைதியில் லயிக்கின்றபோது ஆனந்த அனுபவமும் ஒவ்வொருமனிதனும் அன்றாட

வாழ்வில் உணரும் மறுக்கமுடியாத உண்மைகள். ‘மன அமைதியே மனிதனின் மகிழ்விற்கு அளவுகோல்’ என்பது மிகத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டிய ஒரு உண்மை.

படைப்பின் சிகரமான மனிதனுக்கு மட்டுமே தன்னுடைய மனதை அமைதிப்படுத்தும் ஒரு நிகரற்ற வேறு எந்த பிராணிகளிடத்தும் காண இயலாத சிறப்பான தகுதியும் வலிமையும் ஆகும். ஆனால் இந்த புனிதமான வலிமை இன்று சராசரி மனிதனிடத்தில் மங்கிக் கிடக்கிறது. இந்த உண்மை புலப்படாத காரணத்தால் தன்னுடைய மகிழ்விற்கு பிற பொருட்களை நாடுவதும். அவைகளின் அற்பசுகத்திற்கு கெஞ்சி நிற்பதும் மிகவும் இயற்கையானது போல் தோற்றமளிக்கிறது. ஆனால் நமது சமய இலக்கியங்கள் மனிதனிடத்தில் தற்காலிக உறக்கம் கொண்டுள்ள இந்த வலிமையை தட்டியெழுப்ப பல உண்மைகளையும். அதற்குண்டான பயிற்சிகளையும் முறையாகப் போதிக்கின்றன.

இதை வாழ்க்கையில் ஏற்றுக் கொண்ட ஒவ்வொரு மனிதனும் தன்னைச் சுற்றியிருக்கும் சூழ்நிலை, சந்தர்ப்பங்களின் கருணைக்கு தன்னை ஆளாகாமல். எப்பொழுதும் வாழ்வில் நிரந்தர சுகத்திலும், அமைதியிலும் நிலைத்திருக்கமுடியும். அப்படிப்பட்ட லட்சிய புருஷனே சமுதாயத்திற்கு ஆனந்த ஒளிவீசும் ஜோதியாகத் திகழ்கிறான்! மாறுகின்ற

உலகம் அவனது மனோவலிமையையும் மாற்ற முடியாமல் சக்தியிழந்து விடுகிறது.

எல்லாம் எனக்கு ஏற்ற சந்தர்ப்பங்களே என்று நினைப்பவனே உண்மையான ஆன்ம பலம் கொண்டவன்.

*உத்திஷ்ட! ஜாக்ரத!! ப்ராப்யவரான்னிபோத!!*

*உறக்கம் தவீர்! விழித்தெழு!!*

*உண்மையை உணர்ந்தவனை நாடி*

*நீயும் உணர்ந்து கொள்!!*

*- கதோபநிஷத்-*

---

# PLEDGE

We stand as one family
bound to each other with love and respect.
We serve as an army.
courageous and disciplined.

Ever ready to fight against all low tendencies
and false values, within and without us.

We live honestly
the noble life of sacrifice and service.
producing more than what we consume
and giving more than what we take.
we seek the lord's grace - to keep
us on the path of virtue,courage and wisdom.

may Thy grace and blessing flow
through us to the world around us,
We believe that the service of our country
is the service of the Lord of Lords
and devotion to the people.
is the devotion to the supreme self.
we know our responsibilities;,
give us the ability and courage to fulfill them.

# தமிழகத்தில் எமது கிளைகள்

| | |
|---|---|
| சென்னை | 2,13வது அவென்யு, ஹாரிங்டன்சாலை, சேத்துப்பட்டு, சென்னை. |
| தென்சென்னை | 44-அ யாதவாள் தெரு, ஆதம்பாக்கம்-600 088. |
| தாமரைப்பாக்கம் | செங்கை எம்,ஜி,ஆர்.மாவட்டம் -601103. |
| மதுரை | சுவாமி சின்மயானந்தாசாலை, நாகமலை புல்லூத்து-625 019. 22, டாக்டர் தங்கராஜ் சாலை, முனிசிபால் காலனிபோஸ்ட்ஆபீஸ், வினாயகர் நகர், மதுரை - 625 020. |
| கோவை | சிறுவாணி ரோடு, நல்லூர் வயல் போஸ்ட் - 641 114. |
| திருச்சி | 6/1, கலெக்டர் ஆபீஸ் தெரு, திருச்சி-620 001. |
| கொடைக்கானல் | 'தபோவனம்', ஆப்ஸர்வேட்டரி சாலை, கொடைக்கானல் -624103. |
| பாளையங்கோட்டை | 18-ஹை கிரவுண்ட்ஸ்ரோடு, பாளையம்கோட்டை-627 002. |
| நாகர்கோவில் | 40, சங்கரசுப்பையர் பஜனைமடம், ஒழுங்கினசேரி, நாகர்கோவில்-1. |
| சேலம் | சின்மயாவித்யாலயா, சோளம்பள்ளம், சூரமங்கலம் சேலம்-636005. |